## மார்ச் – 27 – தவக்கால 03ம் புதன்

### "அவருடைய நீதி நெறிகள் அவர்களுக்குத் தெரியாது" – திபா 147:20

### முதல் வாசகம் : இணைச் சட்டம் 4 : 1, 5 – 9

மோசே மக்களைப் பார்த்துக் கூறியது இப்பொழுது இஸ்ரயேலரே! கேளுங்கள் நான் உங்களுக்குக் கற்றுத்தரும் நியமங்கள் முறைமைகளின்படி ஒழுகுங்கள். அதனால் நீங்கள் வாழ்ந்து, உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமையாக்குவீர்கள். நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும் முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன். எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக் கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்றவேண்டும். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்றலுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும், உண்மையில் இப்பேரினம் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர். நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப் போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக்கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன். இவற்றைப் போன்ற நியமங்களையும் முறைமைகளையும் கொண்ட வேறுபேரினம் ஏதாகிலும் உண்டா? கவனமாய் இருங்கள் உங்கள் கண்களால் நீங்கள் கண்ட அனைத்தையும் மறந்து போகாதபடி உங்கள் இதயங்களில் காத்துக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்நாள் முழுமையும் நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அவற்றை எடுத்துக் கூறுங்கள்.

**பதில்பாடல் :** எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக.

### நற்செய்தி : மத்தேயு 5 : 17 - 19

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். ”விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒருபுள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்" என்றார்.

**தியானம்:** போதனைகளில் சிகரமான மலைப்பொழிவில் நற்பேறு பெற்றவர் யார்? என்ற போதனைக்கு அடுத்ததாக இவ்வுலகின் உப்பாக - ஒளியாக வாழுங்கள் எனப்படும் அறிவுரையைத் தொடர்ந்து "திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம்" (மத்தேயு 5:17) என வரவிருக்கும் இறையாட்சியின் நற்செய்தியை அறிவிக்கின்றவராக தம்மை எமக்கு அறிமுகம் செய்யும் ஆண்டவர் இயேசுவை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். அதேவேளையில் நற்செய்தியை அறிவிப்பவர்களது பணி எத்தகையதாக இருத்தல் வேண்டுமெனவும், எவ்வாறான நற்செய்திப் போதனையைக் கடைப்பிடிப்பவர்கள் விண்ணரசில் பெரியவர் எனக்கருதப்படுவார் எனவும் நற்செய்தி எமக்கு வேறுவிதமாகப் படிப்பிப்பதால், ஆண்டவர் இயேசு நமக்குப் போதிப்பதென்ன? ஆண்டவர் இயேசு யூதகுடும்பத்தில் பிறந்திருந்தமையால் அவரது ஆண்மீகம் யூத மத ஆன்மீக முறைமையில் அமைந்திருந்ததாக நாம் கருத்தில்கொள்ளலாம். எனினும், அவர் யூதமதத்தின் ஒருசில சம்பிரதாயங்களை மாற்ற முயன்றதனை நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. யூதமதத்தைக் கடைப்பிடிப்போர் சட்ட நுணுக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஆனால் சட்டத்தின் உண்மைப்பொருளை கடைப்பிடிக்க மாட்டார்கள். ஏனெனில், "மறைநூல் அறிஞர் - பரிசேயர் ஆகியோரின் செய்கையைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும் இல்லையெனில் நீங்கள் விண்ணரசில் புகமுடியாது" (மத்தேயு 5:20) என்கின்றார். இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் தமது 04- 02- 2014 திகதிய ருவிட்டர் செய்தியில் "நம் போதகராகிய கிறிஸ்துவைப் பின்பற்றி நம் சகோதர சகோதரிகள் எதிர்கொள்ளும் ஏழ்மையை உணர்ந்து அதை நம்முடையதாக்கி அதை அகற்றுவதற்கு நடைமுறை நடவடிக்கைகளை எடுப்பதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்" என்று கூறியுள்ளார். எனவே, இறைவார்த்தையை நமது வாழ்வாக்கி இறைவார்த்தையின்படி வாழ்வதே மிகப்பெரிய நற்செய்தி அறிவிப்புப்பணியென ஏற்றுக்கொள்வோம். இத்தவக்காலத்தில் நாமும் இறைவார்த்தையை நமது வாழ்வாக்க முன்வருவோம்.